# மாநில திட்டக் குழுக் கூட்டத்தில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

➤ மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலமாக கிராமப்புற சுகாதாரம் எந்தளவுக்கு மேன்மை அடைந்துள்ளது?

➤ வேலைவாய்ப்பு கூடிவருவதால் சமூகம் அடைந்துள்ள வளர்ச்சி என்ன? என்பது போன்ற தகவல்கள் எங்களுக்கு கிடைத்தன.

நமது அரசின் ஒவ்வொரு திட்டமும், சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரையும் மேம்படுத்துவதாக அமைந்துள்ளது.

காலை உணவுத் திட்டத்தால் மாணவர்களின் பள்ளி வருகை உயர்ந்துள்ளது என்பதை அறிந்தேன். இதனைவிட மகிழ்ச்சியான செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது.

மகளிர் உரிமைத் தொகை மூலமாக பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் அதிகமாகி இருக்கிறது.

பேருந்துகளில் கட்டணமில்லா விடியல் பயணம் மூலமாகப் பெண்களின் சமூகப் பங்களிப்பு அதிகமாகி உள்ளது.

**பல்வேறு பிரிவினரையும் உயர்த்தும் திட்டங்கள்!**

புதுமைப் பெண் திட்டத்தின் காரணமாக கல்லூரிக்குச் செல்லும் மாணவிகளின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. இப்படி ஒவ்வொரு திட்டமும் சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் உயர்த்தி வருகிறது.

இந்த தகவல்களை எல்லாம் மக்களிடமிருந்து நேரடியாக நாங்கள் அறிந்தாலும், புள்ளிவிவரங்களாக நீங்கள் வழங்கி வருகிறீர்கள். இந்தத் திட்டக்குழு அமைக்கப்பட்டு முதல் முறையாக உங்களைச் சந்தித்த போது நான் குறிப்பிட்டதை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய கருத்தியல்களின் அடிதளத்தில் நிற்கும் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம்.

நமது மாநிலத்தின் வளர்ச்சி என்பதும் அதன் அடிப்படையில் இருக்க வேண்டும். தொழில் வளர்ச்சி, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும். வளர்ச்சி என்பது பொருளாதார வளர்ச்சியாக மட்டுமல்ல, சமூக வளர்ச்சியாக இருக்க வேண்டும்.

பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் பெரியாரும், அண்ணாவும், கலைஞரும் காண விரும்பிய வளர்ச்சி. அது தான் திராவிட மாடல் வளர்ச்சி!

ஏற்றத்தாழ்வு என்பது பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, சமூக ரீதியாகவும் இல்லை என்பதை உருவாக்க வேண்டும் என்று நான் அப்போது குறிப்பிட்டேன்.

**கடந்த 3 ஆண்டுகளில் எண்ணற்ற திட்டங்கள்!**

இதே அடிப்படையில்தான், கடந்த மூன்றாண்டுகளாக எண்ணற்றத் திட்டங்களைத் தீட்டினோம். இன்னும் புதிய திட்டங்கள் வர இருக்கின்றன.

மாநில திட்டக்குழுவின் மூலமாக நான் எதிர்பார்ப்பது, புதிய, புதிய சிந்தனைகளை திட்ட வடிவங்களை நான் எதிர்பார்க்கிறேன். கவனம் பெறாத துறைகளில் கவனம் செலுத்தி புதிய திட்டங்களை உருவாக்கித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் எந்தளவுக்கு சிறப்பானவை என்பதை உங்கள் அறிக்கைகள் சொல்கிறது. அதனை இன்னும் சிறப்பானதாக நடத்துவதற்கு ஏதாவது ஆலோசனைகள் இருந்தாலும் சொல்லுங்கள். மேலும், ஆலோசனை சொல்வதோடு உங்கள் கடமை முடிந்துவிடவில்லை. நீங்கள் வழங்கிய ஆலோசனைகள் செயல்படுத்தப்படுகிறதா? என்பதையும் கண்காணியுங்கள். ஆலோசனைகளைச் செயல்படுத்துவதற்கு ஏதாவது தடை, தடங்கல்கள் இருக்கிறதா? என்பதைப் பாருங்கள்.

> **கடந்த மார்ச் மாதம் என்னைச் சந்தித்த துணைத் தலைவர் ஜெயரஞ்சன் அவர்கள் துறை சார்ந்த 16 அறிக்கைகளை அளித்தார்.**
>
> **தமிழ்நாடு அரசின் ஒவ்வொரு திட்டமும் எந்த அளவுக்கு மக்களுக்குப் பயனுள்ள திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அந்த அறிக்கை மூலமாகத் தெரிந்து கொள்ள முடிந்தது.**
>
> **இந்த அறிக்கையைதான், எங்களுக்கு தரப்படும் மார்க் ஷீட்டாக நான் நினைக்கிறேன்.**

கடந்த முறை என்னிடம் தரப்பட்ட அறிக்கையில் கல்லூரி மாணவர்களுக்கான இறுதித் தேர்வு வினாத் தாள்களை மேம்படுத்துவது குறித்த ஆலோசனை சொல்லி இருந்தீர்கள். அது செய்யப்பட்டுள்ளதா? என்பதை ஆய்வு செய்யுங்கள். வேளாண்மை, காடுகள், வெப்பம் அதிகரிப்பு ஆகியவைக் குறித்த உங்களது ஆலோசனைகள், துறை சார்ந்த நிர்வாக நடவடிக்கைகளாக எந்தளவு மாறி உள்ளது என்பதையும் ஆய்வு செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாநில திட்டக்குழுவை முதன் முதலாய் அமைத்தவர் கலைஞர்!**

மாநிலத் திட்டக் குழுவை இந்தியாவிலேயே முதன்முதலாக அமைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

ஒன்றிய அரசில் இருப்பதைப் போல மாநிலத்திற்கு இருக்க வேண்டும் என்று நினைத்ததற்குக் காரணம் அனைத்து வளங்களையும் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு அமைய வேண்டும் என்ற அடிப்படையில் இதனை அமைத்தார்.

- ➤ பசி இல்லை;
- ➤ பஞ்சம் இல்லை;
- ➤ வறுமை இல்லை;
- ➤ கொடுமையான தொற்று நோய் இல்லை;
- ➤ சாலைகள் இல்லாத கிராமங்கள் இல்லை;
- ➤ மின்சாரம் இல்லாத கிராமம் இல்லை;
- ➤ குடிதண்ணீர் இல்லாத கிராமம் இல்லை;
- ➤ பள்ளிகள் இல்லாத கிராமம் இல்லை;

இப்படி தன்னிறைவு பெற்றவையாக அனைத்து மாவட்டங்களையும் உருவாக்கினோம். எல்லா வளங்களும் இருக்கிறது என்ற நிலைமையை உருவாக்கி வருகிறோம்.

**மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்மாதிரி!**

கல்வித் துறையில், வேளாண்மையில், உள்கட்டமைப்பு வசதியில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாக வளர்ந்துவிட்டது. அனைத்துத் துறையும் சமச்சீராக வளர்ந்து வருகிறது.

**சென்னையில் மாபெரும் கருத்தரங்கம் நடத்திட வேண்டும்!**


அண்மையில் நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கை, மிக மிக மகிழ்ச்சியைத் தந்துள்ளது. அந்த அறிக்கையை முன் மாதிரியாக கொண்டு உங்களது ஆய்வறிக்கை ஒன்றை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நிதி வளம் இருக்குமானால், இன்னும் பல திட்டங்களை நம்மால் உருவாக்க முடியும். நிதி வளத்தை பெருக்கும் ஆலோசனைகளைச் சொல்லுங்கள். அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்து மனிதர்களையும் உடனடியாகச் சென்று சேரத் திட்டமிடுங்கள். காலதாமதமின்றி அனைத்துப் பயன்களையும் மக்கள் பெற்றாக வேண்டும். அதற்கான இலகுவான நிர்வாகச் சீர்திருத்தங்களைச் சொல்லுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்திருக்கும் நான், இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு பணியை, பொறுப்பை வழங்க விரும்புகிறேன். நமது திராவிட மாடல் ஆட்சியின் நோக்கங்களை, சாதனைகளைச் சொல்லும் வகையில் ஒரு மாபெரும் கருத்தரங்கை சென்னையில் நீங்கள் நடத்திட வேண்டும். அதில் பல்துறை அறிஞர்கள், ஊடகவியலாளர்கள் போன்றவர்களைப் பங்கேற்க வைத்து, அவர்களது ஆய்வுக் கட்டுரைகளைப் பெற்று, அதனை வெளியிடுமாறு துணைத் தலைவர் ஜெயரஞ்சன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இது நமது அரசு என்ற எண்ணத்தோடு செயல்படும் துணைத் தலைவர் ஜெயரஞ்சன் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ரமேஷ் சந்த் மீனா, நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், குழு உறுப்பினர்கள் பேராசிரியர் இராம.சீனுவாசன், பேராசிரியர் ம.விஜய பாஸ்கர், மு. தீனபந்து, (ஓய்வு), சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், மருத்துவர் ஜோ. அமலோற்பவநாதன், சித்த மருத்துவர் கு.சிவராமன், முனைவர் நர்த்தகி நடராஜ், மாநில திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் (முழு கூடுதல் பொறுப்பு) திருமதி எஸ். சுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




## ‘கலைஞர் 100 – கவிதைகள் 100’ – இன்று

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிடுகிறார்!

**திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி முதல்நூல் பெறுகிறார்! கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலை வகிக்கிறார்!**

சென்னை, ஆக. 7 –

கலைஞர் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு கலைஞர் குறித்து 100 கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்திருக்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து. கலைஞர் 100 கவிதைகள் 100 என்று அந்தத் தொகுப்புக்குப் பெயர் சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் நினைவு நாளான இன்று (ஆகஸ்ட் 7ஆம் தேதி – புதன் கிழமை) காலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது முகாம் அலுவலகத்தில் நூலை வெளியிடுகிறார்; திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி முதல் நூலைப் பெற்றுக்கொள்கிறார்; கவிப்பேரரசு வைரமுத்து முன்னிலை வகிக்கிறார்.

தி.மு.க. தலைமை இலக்கிய அணியின் சார்பில் அன்று மாலை 6 மணிக்கு அதன் அறிமுக விழா அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நிகழ்கிறது. கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமை ஏற்கிறார். இலக்கிய அணியின் செயலாளர் வி.பி.கலைராஜன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, பூச்சி முருகன், துறைமுகம் காஜா, நே.சிற்றரசு, மயிலை வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

அமைச்சர் எ.வ.வேலு, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா ஆகிய இருவரும் சிறப்புரை ஆற்றுகிறார்கள். கவிப்பேரரசு வைரமுத்து நூல் தொகுப்பாளர் உரை நிகழ்த்துகிறார். தஞ்சை கூத்தரசன் நெறியாள்கை செய்கிறார். மு.சீனிவாசன் நன்றியுரை ஆற்றுகிறார்.

இலக்கிய அணியின் பொருளாளர் முனைவர் நா.சந்திரபாபு விழா ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். இலக்கிய அணியின் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

கலைஞரின் பெருமை பாடும் கலைஞர் 100 கவிதைகள் 100 என்ற இந்தத் தொகுப்பு நூல் பல்வேறு வழிகளில் சிறப்புடையது. மூன்று தலைமுறைக் கவிஞர்களால் எழுதப்பட்டது.

அமெரிக்கா, ஐரோப்பா, அமீரகம், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை என்று உலகத் தமிழ்க் கவிஞர்களை உள்ளடக்கியது.

பாவேந்தர் பாரதிதாசன், கவியோகி சுத்தானந்த பாரதியார், நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளை, டாக்டர் மு.வ., டாக்டர் சி.இலக்குவனார் போன்ற முதுபெரும் அறிஞர்களும், சுரதா, கண்ணதாசன், வாலி, அப்துல் ரகுமான், ஈரோடு தமிழன்பன், நா.காமராசன், மு.மேத்தா, காசி ஆனந்தன் போன்ற பிற்காலக் கவிஞர்களும், சௌந்தரா கைலாசம், கனிமொழி கருணாநிதி, தமிழச்சி தங்கப் பாண்டியன் போன்ற பெண்பாற் கவிஞர்களும் மற்றும் நவீனக் கவிஞர்களும் இந்தத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறார்கள்.

மதம் கடந்தும் கட்சி கடந்தும் படைப்பாளர்கள் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். “இது எவருக்கும் எட்டாதது வேறெந்தத் தலைவருக்கும் கிட்டாதது” என்று கவிப்பேரரசு வைரமுத்து பெருமிதத்தோடு சொல்கிறார்.

இந்த நூலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அழகான ஆழமான வாழ்த்துரை வழங்கியிருக்கிறார்; கவிப்பேரரசு வைரமுத்து முன்னுரை எழுதியிருக்கிறார்.

இந்நூல் கலைஞரின் பெருமைகளைச் சரியாகவும் செறிவாகவும் பேசுகிறது. டிஸ்கவரி பப்ளிகேஷன்ஸ் வேடியப்பன் இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறார். இந்தத் தொகுப்பு நூலுக்கு கவிஞரின் உதவியாளர்கள் ப.பாஸ்கரன், வெ.கேசவன் இருவரும் தொண்டு செய்திருக்கிறார்கள். ஆகஸ்ட் 8 முதல் இந்நூல் விற்பனைக்கு வரும்.

“கலைஞர் நூற்றாண்டில் கவிஞர் நூற்றுவர் தீட்டிய கவிதைகளைத் தொகுத்து அவர் நினைவின் நீட்சிக்குப் படைக்கிறேன். தமிழ் ஆசான் என்று என்னால் என்றென்றும் அழைக்கப்பட்ட ஒரு தலைமகனுக்கு என் ஆற்றலுக்கு உட்பட்ட அன்புக் காணிக்கை இது” என்று நெகிழ்ந்தும் மகிழ்ந்தும் சொல்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து.

## ஆதிதிராவிடர் – பழங்குடியினர் கலை – இலக்கிய மேம்பாட்டு சங்கத்தின் மூலம்

# 11 எழுத்தாளர்களின் படைப்புகளை வெளியிட – தலா ரூ.1 லட்சம் உதவித்தொகை! விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன!

சென்னை, ஆக.7-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி யினர் கலை இலக்கிய மேம்பாட்டுச் சங்கத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த இலக்கிய படைப்புகளில் 11 நபர்களது படைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இவர்களது படைப்பினை வெளியிட உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதில், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்த 9 எழுத்தாளர்கள் மற்றும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரச்சினைகளைப் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத ஒரு எழுத்தாளர் மற்றும் பழங்குடியினர் பற்றி எழுதும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத எழுத்தாளர் ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படுவர். இதனை ஊக்குவிக்கும் வண்ணம் இவர்களது சிறந்த இலக்கிய படைப்பினை வெளியிட தலா ரூ.1,00,000/ஆக பின்வரும் நிபந்தனைகளுக் குட்பட்டு வழங்கப்படவுள்ளது.

1. எழுத்தாளர்களுக்கு வயது வரம்பு இல்லை.

2. கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகியவை எதுவாகவும் இருக்கலாம். இருப்பினும் தமிழ் மொழியிலேயே படைப்பு இருக்க வேண்டும். பிறமொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த தமிழ் மொழி படைப்பாகவும் இருக்கலாம்.

3. எம்.பில்., பி.எச்.டி., போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக இருக்க வேண்டும்.

4. படைப்புகள் 90 பக்கங்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

5. ஏற்கனவே சந்தையில் வெளியிடப்பட்டுள்ள படைப்புகளைக் கொண்டு விண்ணப்பித் தல் கூடாது.

6. ஒரு முறை விருதுக்குத் தெரிவு செய்யப்பட்ட எழுத்தாளர் 5 ஆண்டுகளுக்கு பிறகே விண்ணப்பிக்க வேண்டும்.

7. படைப்புகளைத் தேர்ந்தெடுத்தல் குறித்து தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ள வல்லுநர் குழுவின் முடிவே இறுதியானது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இதற்கான விண்ணப்பங்களை தொடர்புடைய மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகங்களிலும், ஆதிதிராவிடர் நல இயக்குநரகத்திலும் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், tn.gov.in/forms என்ற இணைய தளத்திலும் (website) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பிக்க கடைசி நாள். 30.08.2024 விண்ணப்பதாரர்கள் தங்களது படைப்பினை இரு நகல்களிலும் டிஜிட்டல் (Digital) முறையிலும், உரிய படிவத்தில் தவறாமல் கைபேசி எண்ணினை குறிப்பிட்டு உரிய காலத்திற்குள் இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை-05 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



புதுடெல்லியில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், ஒன்றிய இரயில்வேத்துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அவர்களைச் சந்தித்து, தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட சைதாப்பேட்டை இரயில் நிலையத்தில், அம்ருத் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ், நடைமேடை விரிவாக்கம், நகரும் படிக்கட்டுகள், கூடுதல் CCTV கேமரா, மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சாய்தளம் (Ramp) வசதி, நவீன வசதிகளுடன் கூடிய பயணச்சீட்டு வழங்குமிடம் ஆகியவை அமைத்து, இரயில் நிலையத்தை மேம்படுத்தக்கோரியும், நாடு முழுவதும் உள்ள அனைத்து இரயில் நிலையங்களில் உள்ள கடைகளிலும், பெண் பயணிகளின் அவசரத் தேவைக்காக, சானிட்டரி நாப்கின் வைத்திருப்பதைக் கட்டாயமாக்கி, ”சானிட்டரி நாப்கின்” வழங்கும் தானியங்கி இயந்திரம் அமைக்கக் கோரியும் மனு அளித்தார்.

## சங்கராபுரத்தில் விலையில்லா மிதிவண்டி வழங்கல்!

கள்ளக்குறிச்சி, ஆக. 7–

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் சட்டமன்ற தொகுதி, வடக்கனந்தல் பேரூராட்சிக்குட்பட்ட கச்சிராயப்பாளையம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி கல்வித்துறை சார்பில், மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ கலந்து கொண்டு தலைமையேற்று மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி களை வழங்கி சிறப்புரையாற்றினார்,

இதில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் இரா.முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் கீதா, மாவட்ட கல்வி அலுவலர் (இ.நி), கி.லதா, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் ஆ.ஆறுமுகம்,பள்ளி மேலாண்மைக்குழு தலைவர் ஆர்.வெண்ணிலா, பள்ளி வளர்ச்சிக் குழு தலைவர் சின்னசாமிபிள்ளை, பேரூராட்சி மன்ற தலைவர் தா.பன்னீர் செல்வம், துணைத் தலைவர் இரா.தண்டபாணி, பட்டதாரி ஆசிரியர் வெ.சங்கர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக,பள்ளி மேலாண்மைக்குழு, பள்ளி வளர்ச்சிக் குழு பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், ஆசிரியர் பெருமக்கள், மாணவிகள், பொதுமக்கள், மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்பட அனைவரும் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், சத்திரக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று (06.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திடீர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் , துணை இயக்குநர் இந்திரா, மருத்துவ அலுவலர் கார்த்திகேயன், போகலூர் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் சத்யா குணசேகரன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் உ.திசைவீரன் மற்றும் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.